ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளீ

தெய்வீக மாதப் பத்திரிகை



ஸ்ரீ ஸ்வாமிகளின் 'ஜயந்தி மஹோத்ஸவ' சிறப்பிதழ்

வேணு : 4 | அக்டோபர் 1998 | கானம் : 3

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 4 அக்டோபர் 1998 கானம் : 3

## விஷய ஸூசிகை

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 35 | 4 |
| 3. | யுகள கீதம் - தொடர்ச்சி | 7 |
| 4. | நக்ஷத்ரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 16 | 11 |
| 5. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 12 |
| 6. | வேத கதைகள் - 17 | 14 |
| 7. | ஸ்ரீ நாரத பக்தி ஸூத்ரம் - 7 | 16 |
| 8. | எந்தரோ மஹானுபாவுலு - 5 | 22 |
| 9. | பாலகர்களுக்கு ஒரு க்தை - 12 | 27 |
| 10. | செய்திகள் | 30 |
| 11. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 38 | 31 |
| 12. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |



ப்ரஹ்மோத்ஸவத்தில் நம் ஸ்வாமிகளின் நகர ஸங்கீர்த்தனம்

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : சுருட்டி தாளம் : ஆதி

பல்லவி

*ஆகச்ச ஆகச்ச ஸஜ்ஜனஸங்கம்*
*மாகச்ச மாகச்ச துர்ஜனஸங்கம் (ஆகச்ச)*

சரணங்கள்

1. *ஸஜ்ஜன ஸங்கே பஹுஸாரம்*
*துர்ஜன ஸங்கே அதிகோரம் (ஆகச்ச)*

2. *ஸஜ்ஜன ஸங்கே தர்மசிந்தனம்*
*துர்ஜன ஸங்கே துர்போதனம் (ஆகச்ச)*

3. *ஸஜ்ஜன ஸங்கே ஹரிஸேவனம்*
*துர்ஜன ஸங்கே பரிஹாஸம் (ஆகச்ச)*

4. *ஸஜ்ஜன ஸங்கே ஆனந்த:*
*துர்ஜன ஸங்கே ஆலஸ்யம் (ஆகச்ச)*


5. *ஸஜ்ஜன ஸங்கே க்ருஷ்ணகதா*
*துர்ஜன ஸங்கே க்ராம்யகதா (ஆகச்ச)*

6. *ஸஜ்ஜன ஸங்கே மனஶ்ஶாந்தி*
*துர்ஜன ஸங்கே மனோப்ராந்தி (ஆகச்ச)*

7. *ஸஜ்ஜன ஸங்கே ப்ரமோத:*
*துர்ஜன ஸங்கே ப்ரமாத: (ஆகச்ச)*

8. *ஸஜ்ஜன ஸங்கே ஸாதுபோஷணம்*
*துர்ஜன ஸங்கே ஸாதுதூஷணம் (ஆகச்ச)*

9. *ஸஜ்ஜன ஸங்கே முரளீதர:*
*துர்ஜன ஸங்கே மஹிஷாரூட: (ஆகச்ச)*




மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனின் ஐந்தாம் வருட ப்ரஹ்மோத்ஸவம் வழக்கம் போல் நம்முடைய மதுரபுரி ஆஸ்ரமத்தில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. உத்ஸவம் 14-8-98 அன்று ஆரம்பித்து 24-8-98 அன்று வரை நடைபெற்றது.

ஸ்ரீ க்ருஷ்ண ஜன்மாஷ்டமியன்று அவதாரகட்டம் பாராயணம் செய்யப்பட்டது. அனைவருக்கும் வரதானம் செய்யப்பட்டது. க்ருஷ்ணனுக்கு க்ஷீர பஷணங்கள், நவநீதம், சீடை முதலியவை ஸமர்ப்பிக்கப்பட்டன. ஸ்ரீ ஸ்வாமிகளும், பக்தர்களும் க்ருஷ்ண ஜனனோத்ஸவத்தை ஒட்டி உறிகளில் கட்டப்பட்டுள்ள பால் தயிர் உள்ள பானைகளை உடைத்தனர். இவ்வாறு நந்தோத்ஸவத்துடன் கோகுலாஷ்டமி உத்ஸவம் குதூகலமாகத் துவங்கியது. இந்த வருடம் நிகுஞ்ஜோத்ஸவத்தன்று உத்ஸவ மண்டபம் மிகவும் விமரிசையாக பூக்களினால் அலங்கரிக்கப்பட்டது. ஸ்ரீ பாலமுரளிகிருஷ்ணா அவர்களின் ஸங்கீத கச்சேரி, பகவானுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

உத்ஸவத்தில் ஒரு சில தினங்களில் மலைப்பட்டு, மாஹாண்யம், மணிமங்கலம் முதலிய கிராமங்களுக்கு பெருமாள் எழுந்தருளினார். கிராமத்து ஜனங்களனைவரும் பக்தி பூர்வமாகப் பெருமாளை எதிர்கொண்டழைத்து எல்லாவிதமான உபசாரங்களையும் செய்தனர். இந்த வருடம், முதன் முறையாக பகவானுக்கு புஷ்பப் பல்லக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. தினமும் பாகவதோத்தமர்களால் நாமஸங்கீர்த்தனம் நடைபெற்றது. ப்ரதி தினம், காலையில் பாகவத மூலபாராயணமும், மாலையில் ஸ்ரீமான் பாலாஜி அவர்களின் பாகவத உபன்யாசமும் நடைபெற்றது. பூர்த்தி தினத்தன்று ராதா கல்யாணம் நடைபெற்றது. அன்று தெப்போத்ஸவமும் கொண்டாடப்பட்டது.

இவ்வுத்ஸவத்தில் கோவிந்த பட்டாபிஷேகத்தன்று ஆஸ்ரமத்தின் எதிரிலுள்ள மதுராசலமலைக்கு எம்பெருமான் எழுந்தருளினார். அவ்வமயம், உபன்யாசத்தில் சொல்லும்பொழுது ''ஸ்ரீமத் பாகவதத்தில், பகவான் உத்தவனுக்கு உபதேசம் செய்யும்பொழுது தன்னுடைய ஜனனோத்ஸவத்தை கொண்டாடும் படியும், தனது லீலைகளை அனுகரணம் பண்ணும்படியும் உபதேசித்தருளினார்.

அன்று பகவான், கோகுலம், ப்ருந்தாவனம் இவற்றில் செய்த அனைத்து லீலைகளையும் இன்று, நமக்காக ப்ரேமிகவரதன் அனுகரணம் செய்து காண்பிக்கின்றான். ஆகவே, இது போன்ற உத்ஸவங்களை கொண்டாடுவதற்கு பகவான் வாக்கே ப்ரமாணமாகும். பகவத்பாதாள் தன்னுடைய ஷட்பதி ஸ்லோகத்தில் வினயமுள்ளோர்களிடம் மட்டுமே விஷ்ணு ப்ரீதி அடைகிறார் என்று கூறியுள்ளார். இந்திரன் உள்ளிட்ட ஸகல தேவர்களையும் அவரவர்கள் ஸ்தானத்தில் இருக்க வைத்து லோகத்தை பரிபாலித்து வருவது ஸ்ரீ க்ருஷ்ணனே ஆகும். பகவான் இங்கு ஒன்றுமறியாத குழந்தை போல் அவதாரம் செய்து லீலைகளை செய்தபோதிலும், ஸர்வ ப்ரபஞ்சத்தையும் தன் வஸத்திலேயே வைத்துள்ளான்.

இப்படி இருக்கையில், நாளுக்கு நாள் இந்திரனுக்கு கர்வம் மேலோங்கி வருவதைக் கவனித்த பகவான் மிகவும் கவலை கொண்டான். ஒருக்கால் கர்வத்தினால் இந்திரன் மற்ற தேவதைகளிடமும் ரிஷிகளிடமும் அபசாரப்படுவானேயானால் அவர்கள் அவனை சபித்து விடுவார்களே என்று கவலைகொண்டு எப்படியாவது தன்னிடத்தில் அவனை கர்வப்படும்படி செய்தால் தான், அந்த கர்வத்தை போக்கி அவனை அனுக்ரஹித்து விடலாமே என்று பகவான் நினைத்தான். இந்திரனை தன்னிடம் வரும்படி செய்ய ஒரு யுக்தி செய்தார். வருடா வருடம் யாதவ குலத்தினர் செய்து வரும் இந்திர யாகத்தை அவ்வருடம் செய்ய வேண்டாம் என்று பகவான் தடுத்து நிறுத்தினான். காலம் காலமாக செய்து வந்த அந்த யாகத்தை குழந்தை க்ருஷ்ணன் சொன்னதன் பொருட்டு அத்துனை பேரும் அந்த யாகத்தை நிறுத்தி விட்டனர். ஒருவர் கூட அதற்கான காரணத்தை க்ருஷ்ணனிடம் கேட்கவில்லை. அவர்கள் பகவானைப் பார்த்து ஒரே ஒரு கேள்வி மட்டும் கேட்டனர். ''யாகத்திற்கான பலவிதமான பக்ஷணங்களும், அன்னங்களும் அதிக அளவில் செய்யப்பட்டுள்ளனவே, இவைகளை என்ன பண்ணுவது?'' என்பது தான் அது.

பகவான் கோபாலனும், ''நமக்கெல்லாம் ப்ரத்யக்ஷமாய் உள்ள கோவர்த்தன மலைக்கே இவை எல்லாம் நிவேதனம் செய்து விடலாம்'' என்று பதில் கூற, அவர்களும் அதற்கு ஸம்மதித்தனர். ஆனால், இத்துணை பேருக்கும் ''யாகம் என்றால் அக்னியில் அத்தனையும் போட்டு விடலாம். கோவர்த்தன மலைக்கு நிவேதனம் செய்வதால் இத்துனை அன்னங்கள், பக்ஷணங்கள், எப்படி விநியோகம் ஆகும்'' என்ற கவலை மட்டும் இருந்தது. பகவான் ஒரு விராட் ஸ்வரூபத்தை எடுத்துக் கொண்டு நிறைய அன்ன, பக்ஷணங்களையும் சாப்பிட்டு விட்டான்.

ஒன்றும் அறியாதவன்போல் நந்தபாபாவின் அருகில் நின்றுகொண்டு கோவர்த்தன மலையை தானும் ஸேவிக்கின்றான். பூஜை, நிவேதனங்களை கோவர்த்தன மலைக்குச் செய்தபிறகு, பசு, ப்ராஹ்மணன் இவர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு பிறகு கோகுலத்தில் உள்ள கழுதை, குதிரை உட்பட எல்லாவற்றிற்கும் விநியோகம் செய்தான். நாரதர் மூலமாக இந்திரயாகம் நின்று போனது பற்றி கேள்விப்பட்ட இந்திரன் மகத்தான கோபத்தை அடைந்து, பெரிய அபாய ஆலங்கட்டி மழையை பெய்யச் செய்து ப்ருந்தாவனத்தை அழித்து விட எண்ணினான். நல்லவர்களைக் கூட கோபம் எந்த அளவிற்கு பாதிக்கிறது என்பது இதிலிருந்து தெரிகிறது. ஆலங்கட்டி, கட்டி மழையாக பெய்ய, கோபர்கள், பசுக்கள் அனைவரும் பரிதவிக்க, பகவான் கோவர்த்தன மலையை தனது விரலால் தூக்கினான். அனைவரையும் அதனடியில் வரச்சொல்லி ரக்ஷிக்கிறான். பகவானின் திவ்ய மகிமையால் அவர்களுக்கு பசி, தூக்கம், தாகம் எதுவும் தெரியவில்லை. ஏழு நாட்கள் விடாமல் மழை பெய்தும், தன்னைத் தேடி ஒருவரும் வராமையால் இந்திரன் ப்ருந்தாவனத்திற்கு வந்து பார்க்க, பகவான், கோவர்த்தன மலையை உத்தாரணம் செய்து தன்னைச் சேர்ந்த பசுக்களையும், கோபர்களையும் ரக்ஷிப்பதைப் பார்த்து தன்னுடைய அஜ்ஞானம் நீங்கப் பெற்று பகவானிடம் வந்து சரணாகதி அடைந்தான். பிறகு மழையும் நின்று விட்டது.

பகவான் கோபர்களையும் பசுக்களையும் அனுப்பிவிட்டு இந்திரனை ப்ருந்தாவனத்திற்குள் நுழையவிடாமல் கோவர்த்தனம் மேலேயே நின்று கொண்டு அவனுடன் பேசலானான். இந்திரனுடன் கூட வந்த தேவலோக சுரபியானது தனது வர்க்கத்தை, ''பசுக்கள், பக்ஷிகள் இவற்றை பகவான் ரக்ஷித்தமையால் அவனுக்கு க்ருதக்ஞையை தெரிவிக்கும் பொருட்டு தனது சரீரத்தினால் பகவானுக்கு க்ஷீர அபிஷேகம் செய்தது. ''எப்பொழுது கோபத்தினால் எங்கள் வர்க்கத்தை அழிக்கப்பார்த்தானோ அவன் தலைவனாக இருக்க மாட்டான். நீயே எங்கள் தலைவன்'' என்று கூறியது. இந்திரனும் பகவானுக்கு கோவிந்தன் என்று திருநாமம் சொல்லி பட்டாபிஷேகம் செய்தான்'' என்றார்.

நமது ப்ரேமிக வரதனுக்கும் பல பாகவதோத்தமர்கள் 'கோவிந்தா கோவிந்தா' என்று புளகாங்கிதத்துடன் சொல்ல நம் ஸ்வாமிகள், பல வகையான புஷ்பங்களால் மலர் மழை தூவி கோவிந்த பட்டாபிஷேகம் செய்தது மிகவும் ரம்யமாக இருந்தது.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

## யுகள கீதம் - தொடர்ச்சி

அனுசரை: ஸமநுவர்ணித வீர்ய:
ஆதிபூருஷ இவாசல பூதி: ।
வனசரோ கிரிதடேஷுசரந்தீ:
வேணுநாSSஹ்வயதி கா: ஸ யதா ஹி ॥ 7

வனலதாஸ்தரவ ஆத்மனி விஷ்ணும்
வ்யஞ்ஜயந்த்ய இவ புஷ்ப பலாட்யா: ।
ப்ரணத பாரவிடபா மதுதாரா:
ப்ரேமஹ்ருஷ்ட தநவ: ஸஸ்ருஜு: ஸ்ம ॥ 8

தர்ஶநீயதிலகோ வனமாலா -
திவ்யகந்ததுளஸீ மதுமத்தை: ।
அலிகுலைரலகு கீதமபீஷ்டமாத்ரியன்
யர்ஹி ஸந்தித வேணு: ॥ 9

ஸரஸி ஸாரஸ ஹம்ஸவிஹங்கா:
சாருகீதஹ்ருத சேதஸ ஏத்ய ।
ஹரிமுபாஸத தே யதசித்தா
ஹந்த மீலித த்ருஶோ த்ருதமௌனா: ॥ 10

ஸஹபல: ஸ்ரகவதம்ஸ விலாஸ:
ஸாநுஷு க்ஷிதிப்ருதோ வ்ரஜதேப்ய: ।
ஹர்ஷயன் யர்ஹி வேணுரவேண
ஜாதஹர்ஷ உபரம்பதி விஶ்வம் ॥ 11

மஹத திக்ரமண ஶங்கித சேதா
மந்தமந்தம நுகர்ஜதி மேக: ।
ஸுஹ்ருதமப்யவர்ஷத் ஸுமனோபி:
சாயயா ச விததத் ப்ரதபத்ரம் ॥ 12

விவிதகோப சரணேஷு விதக்த:
வேணு வாத்ய உருதா நிஜஶிக்ஷ:।
தவ ஸுத: ஸதியதாSதர பிம்பே
தத்தவேணுரநயத் ஸ்வரஜாதீ: ॥ 13

ஸவனஶஸ்ததுபதார்ய ஸுரேஶா:
ஶக்ரஶர்வபரமேஷ்டிபுரோகா: ।
கவய ஆனத கந்தரசித்தா:
கஶ்மலம்யயுரநிஶ்சித தத்வா: ॥ 14



நிஜபதாப்ஜ தலைர்த்வஜவஜ்ர -
நீரஜாங்குஶ விசித்ரலலாமை: ।
வ்ரஜபுவ: ஶமயன் குரதோதம்
வர்ஷ்ம துர்யகதி ரீடிதவேணு: ॥ 15

வ்ரஜதி தேந வயம் ஸவிலாஸ -
வீக்ஷணார்பித மனோபவ வேகா: ।
குஜகதிம் கமிதா ந விதாம:
கஶ்மலேன கபரம் வஸனம் வா ॥ 16

மணிதர: க்வசிதா கணயன் கா
மாலயா தயித கந்த துளஸ்யா: ।
ப்ரணயினோऽநுசரஸ்ய கதாம்ऽஸே
ப்ரக்ஷிபன் புஜ மகாயத யத்ர ॥ 17

க்வணித வேணுரவ வஞ்சித சித்தா:
க்ருஷ்ண மன்வஸத க்ருஷ்ண க்ருஹிண்ய: ।
குண கணார்ண மநுகத்ய ஹரிண்ய:
கோபிகா இவ விமுக்த க்ருஹாஶா: ॥ 18

(7 - 8) (பின்தொடர்ந்து வருகின்றவர்களால், கோபர்களால்) நன்கு வர்ணிக்கப்பட்ட வீர்யத்தையுடையவனும், ஆதிபுருஷனைப் போல் (வாஸுதேவன்) அழியாத லக்ஷ்மியை உடையவனும், காட்டில் ஸஞ்சரிக்கின்றவனுமான அந்த கோபாலன் மலைப் ப்ரதேசங்களில் ஸஞ்சரிக்கின்ற பசுக்களை வேணுவினால் அழைக்கும்பொழுது வனத்திலுள்ள கொடிகளும் விருக்ஷங்களும் தங்களிடம் ப்ரகாசிக்கின்ற விஷ்ணுவை குறிப்பிடுபவைப்போல புஷ்பம், பழம் நிறைந்தவை களாகவும் ப்ரேமையினால் தளர்ந்த ஶரீரங்களையுடையனவாகி மதுதாரைகளை (தேன்மழை) உண்டாக்கின.

(9-10) தரிசிக்க வேண்டிய திலகத்தையுடைய ஸ்ரீ க்ருஷ்ணன், வனமாலையில் திவ்ய வாசனையுடன் கூடியதான துளஸியுடன் தேனினால் மதங்கொண்ட வண்டுகளினால் நன்றாகப் பாடப்பட்ட இஷ்டமான கீதத்தை கேட்டுக்கொண்டு வேணுவை ஊதும்பொழுது ஸாரஸம், ஹம்ஸம் மற்றுமுள்ள பக்ஷிகள் யாவும் ரம்யமான கானத்தினால் இழுக்கப்பட்ட சித்தத்தை உடையவைகளாய், அருகில் வந்து அடங்கிய சித்தமுள்ளவைகளாய் மௌனத்துடன் மூடிய கண்களையுடையவனவாக ஆகி க்ருஷ்ணனை தியானித்தன.

(11-12) ஹே கோபிகைகளே! க்ருஷ்ணன் பலராமனுடன் கூட மாலைகளினால் செய்யப்பட்ட கர்ணாபரணங்களின் விலாஸத்தை

உடையவனாய் மலையுச்சிகளில் இருந்துகொண்டு ஸந்தோஷத்தை உடையவனாய் எப்பொழுது வேணுவின் ஸப்தத்தினால் உலகத்தை ஆனந்தப்படுத்திக்கொண்டு இருந்தானோ அப்பொழுது மேகமானது ஸ்ரீ க்ருஷ்ணனை தாண்டிச் செல்வதில் மனமில்லாததாய், மிகவும் மெதுவாக அவனுடைய கீதத்திற்கு ஏற்றபடி ஒத்து, கர்ஜித்து, நிழலால் குடை பிடித்துக்கொண்டு தனது தோழனான ஸ்ரீ க்ருஷ்ணனை புஷ்பங்களால் வர்ஷிக்கவும் செய்தது.

(13-14) ஹே யசோதே! இடையர்களின் பலவிதமான விளையாட்டுகளில் ஸமர்த்தனான உன்னுடைய குமாரன், வேணு கானத்தில் தானாகவேக் கற்றுக்கொண்ட பலவகைப்பட்ட நிஷாதம், ரிஷபம் முதலிய ஸ்வரலாபங்களை, கோவைப்பழம் போன்ற உதட்டில் வைக்கப்பட்ட வேணுவை உடையவனாய் கானம் பண்ணும்பொழுது தேவேந்திரன், பரமஶிவன், ப்ரஹ்மதேவர் முதலிய தேவஶ்ரேஷ்டர்கள் அந்த ஸ்வரஜாதிகளை மந்த்ரம், மத்யமம், தாரம் என்ற பேதங்களுடன் கேட்டு, கேட்ட இடத்தில் கழுத்தையும் மனதையும் செலுத்தியவர்களாய் இருந்தும் அவைகளின் உண்மையை அறியாதவர்களாய் மோஹத்தை அடைந்தார்கள்.

(15-16) யானைபோல் நடக்கின்ற ஸ்ரீ க்ருஷ்ணன், வேணுகானம் செய்து கொண்டு த்வஜம், வஜ்ரம், தாமரைப்பூ, அங்குஶம் முதலிய விசித்ர அடையாளங்களுடைய தனது மலரடிகளால் கோகுல பூமிக்கு பசுக்களுடைய குளம்படிகளால் உண்டாகும் கஷ்டத்தை ஆற்றிக் கொண்டு போகின்றானோ, அதனால் அழகிய பார்வையால் உண்டு பண்ணப்பட்ட மன்மத விகாரத்தையுடையவர்களான நாங்கள் மரங்களின் தன்மையை அடைவிக்கப்பட்டவர்களாய், மயக்கத்தால், நழுவக்கூடிய வஸ்த்ரத்தையோ, கூந்தலையோ அறியவில்லை.

(17-18) தமக்கு ப்ரியமான வாஸனையுள்ள துளஸியின் மாலையுடன் கூடினவனும், மணிகளை (ஸதங்கைகளை) தரித்தவனுமான ஸ்ரீ கோபாலன், சில ஸமயம் பசுக்களை எண்ணிக் கொண்டும், தம்முடன் வரும் ஸ்நேகிதர்களின் தோளில் கையை போட்டுக் கொண்டும் எப்பொழுது எவ்விடத்தில் பாடுகின்றானோ, அவ்விடத்தில் வேணு கானத்தால் பரவசமடைந்த மனதை உடையவைகளான க்ருஷ்ண மான்களின் பத்நிகளான பெண்மான்கள், கல்யாண குணக்கடலாகிய ஸ்ரீ க்ருஷ்ணனிடம் சென்று கோபிகைகள் போல இல்லற ஆசை மறந்தவர்களாய் நான்கு பக்கங்களிலும் சுற்றியிருந்தன.

(அடுத்த இதழில் முடியும்)

– பாலாஜி

# நக்ஷத்ரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 16

- நித்யக்னிஹோத்ரி ப்ரஹ்மஸ்ரீ
**A. ஸுந்தரேஸ ஶர்மா வாஜபேயயாஜி**

## கேட்டை

இந்த நக்ஷத்ரம் தேவராஜாவான இந்த்ரனை தேவதையாக கொண்டது. கேட்டை, முதல் பிள்ளைக்கு உகந்தது. ஆகாயத்தில், ஆவணி மாதம் 14-ந் தேதி முதல் 27-ந் தேதி வரை நக்ஷத்ர உதய காலத்தில் தேள் கொடுக்கு போன்றும், ஈட்டி போன்றும் கேட்டை அடையாளம் காட்டப்படுகிறது என வான ஶாஸ்த்ரக்ஞர்கள் கூறுகிறார்கள். இதன் அதி தேவதையான இந்த்ரன் நான்கு கைகளுடன் வெள்ளை யானை மேல் வஜ்ராயுதம், பாசம், வரதம், அபயம் கைகளில் உடையவராக விளங்குகிறார். பொதுவாகக் கேட்டையில் பிறக்கும் பிள்ளை தன் அண்ணனை பாதிப்பான் என்றிருப்பினும் சாந்தி செய்தால் பாதகம் குறைந்துவிடும். கேட்டையில் பிறந்த பெண் மூத்த நாட்டுப் பெண்ணாகவே புக்ககம் செல்ல வேண்டும் என்றும் கூறுவதுண்டு. இது போன்ற சில விஷயங்கள் இருப்பினும் கேட்டை நக்ஷத்ரம் தனி பெருமை கொண்டதே.

கேட்டையில் பிறந்தவர்கள், மிகவும் தர்ம சிந்தனை மிக்கவர் களாகவும், தனக்கு கிடைத்ததைக் கொண்டு ஸந்தோஷப்படுபவர் களாகவும் இருப்பர் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. ஆனால், இவர்களுக்கு உள்ள ஒரு குறைபாடு சற்று கர்வத்தினால் மித்ரர்களை இழந்துவிடுவார்கள். சிறு விஷயத்திற்கு கூட அதிகம் கோபப்படுவார்கள். ஏதோ ஒரு ரோகம் இவர்களுடன் இருந்து கொண்டே இருக்கும்; சுறுசுறுப்புடன் செயல்படுவார்கள். எதிலும் தனக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என நினைப்பார்கள். கேட்டை நக்ஷத்ர யாகத்திற்கு பெரிய நெல்லிலிருந்து (120 நாட்களில் விளையக் கூடிய நெல்) கிடைக்கக் கூடிய அரிசியை வைத்து புரோடாசம் தயார் செய்து யாகம் செய்ய வேண்டும். உயர்ந்த ஸ்தானத்தை அடைய விரும்புபவன் இந்த யாகத்தைச் செய்யலாம். இந்த நக்ஷத்ரத்தில்தான் இந்திரன் வ்ருத்ராஸுரனை வதம் செய்து பெருமை அடைந்தார்.

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : கார்ய குரு, காரண குரு என்று கூறுகின்றார்களே, இதன் அர்த்தம் என்ன?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : மனிதர்களுடைய ஸ்வபாவம் விசித்ரமானது. சிலரை, செய் என்றால் செய்வார்கள். சிலரை, செய்யாதே என்றால்தான் செய்வார்கள். மேலும், ஒருவரை எதிர்ப்புகளும், போராட்டங்களும், தோல்விகளும், அவமானமும் முன்னேற்றும் அளவிற்கு, பாராட்டும், ஆதரவும், ஸாதகமான சூழ்நிலையும், வெற்றிகளும் முன்னேற்றத்தைத் தருவதில்லை. நமக்கு பகவானை அடையவேண்டும் என்ற வெறி ஏற்பட ஒருவரோ அல்லது ஏதோ ஒரு ஸம்பவமோ காரணமாக இருக்குமானால் அவர்தான் அல்லது அந்த ஸம்பவம்தான் காரண குரு. அப்படி ஏற்பட்ட தாபத்திற்கு ஸரியான மார்க்கத்தைக் காட்டி பகவானை அடையச் செய்பவர் கார்ய குரு.

*கேள்வி : தாங்கள் இதற்கு புராணங்களிலிருந்து ஏதாவது உதாரணம் தரமுடியுமா?*

பதில் : கூறலாமே. துருவ சரித்திரத்தை எடுத்துக் கொண்டால் அவனுடைய சிறு தாயார் அவனுக்குக் காரண குரு. ஸுருசி என்ற அவள் அப்படி அவனிடம் பேசாத பக்ஷத்தில் துருவனுக்கு பகவானை அடையவேண்டும் என்ற தாபம் உண்டாகப் போவதில்லை. அவ்வாறு பகவானை அடைய கிளம்பியவனுக்கு நாரத மஹரிஷி சரியான மார்க்கத்தைக் காண்பித்து, உபதேசித்து, பகவானை அடையும்படி செய்தார் அல்லவா! அதனால் நாரத மஹரிஷி துருவனுக்கு கார்ய குருவாவார்.

*கேள்வி : அநேக இடங்களில் இப்பொழுது பாகவத பூஜையெல்லாம் நடத்துகிறார்களே, இதைப்பற்றி தங்கள் அபிப்ராயம் என்ன?*

பதில் : அநேக இடங்களில் இது போலவே ஸுவாஸினி பூஜைகளும் நடைபெறுகின்றன. முதலில் இதன் தத்துவத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். கோவிலில் ஆராதனைக்கென்று அர்ச்சாவதாரத்தில் பெருமாள் எழுந்தருளியிருக்கிறார். அந்த பெருமாளுக்குக் குறிப்பிட்ட காலங்களில் திருமஞ்சனமும், பூஜைகளும், ஆராதனைகளும் செய்கின்றோம். ஆராதனை காலங்கள் தவிர மற்ற காலங்களிலும் பெருமாளிடம் அதே பக்தி ஸ்ரத்தையுடன் தான் இருக்கின்றோம். பகவானை நிந்திப்பதில்லை, அவமதிப்பதில்லை, பரிஹாஸம் செய்வதில்லை.

அது போலவே, விசேஷமான காலங்களில் ஸுவாஸினிகளை மனை போட்டு உட்கார வைத்து பூஜை செய்துவிட்டு, மற்ற ஸமயங்களில் அவர்களை நிந்திப்பது, அவமானப்படுத்துவது, அடிப்பது, உதைப்பது இவையெல்லாம் கூடாது. எப்பொழுதும் அவர்களை தேவியின் ரூபமாகவே பார்க்க வேண்டும். மொத்தத்தில், அவர்களை எப்பொழுதும் தேவியின் ரூபமாகவே பார்க்கத் தெரிந்துவிட்டால், பூஜை கூட அவஶ்யமில்லை. அதுபோல், ஏதோ ஒரு நாளைக்கு பாகவதருக்கு பூஜை, உபசாரங்கள் எல்லாம் செய்வது மட்டும் போதாது. எப்பொழுதும் அவர்களை ஹரியின் ஸ்வரூபமாகவே பார்க்க வேண்டும்.

*கேள்வி : அருணகிரிநாதர், பெண்களை வெறுக்க வேண்டும் என்று தன்னுடைய பல பாடல்களில் பாடியுள்ளார். அப்படி பாடும் ஸமயங்களில் எல்லாம் பெண்களின் ரூப லாவண்யங்களை வர்ணித்துவிட்டு பிறகு நிந்திக்க வேண்டிய அவஶ்யம் என்ன?*

பதில் : கலா சாதுர்யம் உள்ளவர்களாலும், நல்ல ரஸிக ஸ்வபாவம் உள்ளவர்களாலும்தான் கவிதைகளும் கீர்த்தனைகளும் புனைய முடியும். ஆகவே, ஸ்வபாவமான அவர்களின் ரஸிகத் தன்மையால் நிந்திக்க வேண்டிய விஷயங்களைக் கூட வர்ணித்துவிட்டு நிந்திக்கிறார்கள்.

---

(11-ம் பக்கம் தொடர்ச்சி)

நமது வாழ்க்கைக்கு மிகப் பெரிய சத்ரு அதிகப்பசி. அதாவது, சாப்பாடு பசி மட்டுமில்லை. எதிலும் அளவுக்கதிகமான ஆசையே ஒரு பசிதான். அந்த பசியை இந்த யாகத்தால் நாம் ஜயித்துவிடலாம். கேட்டை நக்ஷத்ரகாரர்கள் உறுதியாக இருப்பது மிகக்கடினம். சேருவாரை அனுசரித்து, அவ்வப்பொழுது மாறிவிடும் தன்மை இவர்களுடையது. இவர்கள் த்ருதியாக செயல்பட்டார்களேயானால் மிக உயர்ந்த பதவிகளை அடையக்கூடிய தகுதியை அடைவார்கள். இவர்கள் மஹாவிஷ்ணுவை விசேஷமாக உபாஸிப்பதால் உயர்வை அடைவார்கள்.

---

நாம் எவ்வளவு பெரிய காரியங்களை ஸாதிக்கின்றோம் என்பது முக்யமல்ல. எப்படி ஸாதிக்கின்றோம் என்பதுதான் முக்யம்.

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

# வேத கதைகள் - 17

- தர்மக்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவிரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேச ஸாஸ்த்ரிகள்

## வெள்ளியின் தோற்றம்

ஒரு ஸமயம், தேவர்களுக்கும் அஸுரர்களுக்குமிடையே போர் ஏற்பட்டது. இருவருக்கும் இவ்விதம் அடிக்கடி போர் ஏற்பட்டு பரம்பொருளின் அருளால் தேவர்கள் வெற்றி பெற்றார்கள் என்று வேதங்களில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. சில சமயம் அஸுரர்களுக்கும் வெற்றி ஏற்பட்டதாகத் தெரிகின்றது. அஸுரர்களின் வெற்றியையும் வேதமே கூறுகின்றது. இவ்விதம் ஒரு முறை ஏற்பட்ட தேவாஸுர யுத்தத்தில் தேவர்களுக்கு ஒரு ஸந்தேகம் ஏற்பட்டது. இப்போரில் ஒருக்கால் அசுரர்களுக்கு வெற்றி ஏற்பட்டால் நாம் உயிர் வாழ்வதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தார்கள். பிறகு நன்கு ஆலோசித்து, நம்மிடம் உள்ள மணி, முத்து முதலிய உயர்ந்த பொருட்களை அக்னியிடம் பாதுகாக்கும்படி கொடுத்து வைப்போம். ஒருக்கால் தோல்வி ஏற்பட்டால் அக்னியிடம் கொடுக்கப்பட்ட உயர்ந்த செல்வங்களை திரும்பப்பெற்று உயிர் வாழலாம் என்று எண்ணியவர்களாக தேவர்கள், தங்கள் செல்வம் யாவற்றையும் அக்னியிடம் அடைக்கலமாக அளித்தார்கள்.

தேவர்களால் அளிக்கப்பட்ட அடைக்கலமான பொருள்களை கண்டு, அக்னிக்கு அதன் மீது ஆசை ஏற்பட்டது. தேவர்களின் இச் செல்வத்தை நாமே எடுத்துக் கொள்வோம். தேவர்களுக்கு திருப்பி அளிக்க வேண்டாம் என்று எண்ணியவனாக அந்த தேவர்களின் செல்வத்தோடு ஓடி ஒளிந்தான். தெய்வத்தின் அருளால் வெற்றி அடைந்த தேவர்கள் அக்னியை அணுகி செல்வத்தைக் கேட்டனர். அக்னிக்கு அவர்களுக்குச் செல்வத்தை திருப்பிக் கொடுக்க விருப்பவில்லை. அதனால் கோபமடைந்த தேவர்கள் அக்னியை துன்புறுத்தி பலாத்காரமாக செல்வத்தை மீட்க முற்பட்டனர். தேவர்கள் துன்புறுத்தியதாலும் விரும்பிய செல்வம் நழுவிப் போவதாலும் வருந்திய அக்னி அழுதார். ரோதனம் என்றால் அழுகை என்று பொருள். ரோதனம் செய்ததால் அக்னிக்கு ருத்ரன் என்று பெயர் ஏற்பட்டது.

*யதரோதீத் । தத்ருத்ரஸ்ய ருத்ரத்வம் ॥*

என்று அக்னிக்கு ருத்ரன் என்று பெயர் ஏற்பட்டதை வேதம் விளக்குகிறது. அக்னி அழும்பொழுது அவர் கண்ணீர் பூமியில் சிந்தியது. அது வெள்ளியாக ஆயிற்று. ஹிரண்யம் என்ற சொல் தங்கம், வெள்ளி இரண்டிற்கும் பொதுவானது. ஆதலால், இங்கு வெள்ளியை குறிப்பிடுவதற்காக

*ரஜதம் ஹிரண்ய மபவத் ।*

என்று சொல்லப்படுகிறது. ஹிரண்யம் என்ற சொல்லோடு ரஜதம் என்ற சொல்லைச் சேர்த்தால் வெள்ளியை குறிக்கும். ஹிரண்யம் என்ற சொல்லோடு ஸுவர்ணம் என்ற சொல்லைச் சேர்த்தால் தங்கத்தை குறிக்கும். ஆதலால் வேதங்களில் தங்கத்தைக் கூறும் பொழுது

*ஸுவர்ணம் ஹிரண்யம் ।*

என்று கூறுகிறது. இவ்விதம் அக்னியின் கண்ணீரிலிருந்து வெள்ளி ஏற்பட்டதால் யாகத்தில் வெள்ளியை தக்ஷிணையாக அளித்தால், அளித்தவர்கள் வீட்டில் யாவரும் அழுவார்கள். ரோதனத்திற்குரிய சந்தர்ப்பமானது ஏற்படும் என்று கருத்து. இவ்விதம், தேவர்கள் அக்னியை துன்புறுத்தியும், வற்புறுத்தி அழச்செய்தும் அக்னிக்கு தேவர்களின் செல்வத்தை அவர்களிடம் திருப்பித்தர விருப்பமில்லை.

''ஒரு யாகத்தில் எனக்குதான் எல்லா ஹவிர்பாகமும் கிடைக்க வேண்டும்; மற்ற எந்த தேவர்களுக்கும் ஹவிர்பாகம் கிடைக்கக் கூடாது'' என்று வரம் கேட்டான். தேவர்களும் புநராதானம் என்ற கர்மாவில் உனக்கே எல்லா ஹவிர்பாகமும் வந்து சேரட்டும் என்று வரமளித்தனர். அக்னியும் மகிழ்ந்து தேவர்களின் செல்வத்தை அவர்களுக்குத் திருப்பித் தருவதற்கு இசைந்தான். ■

---

**பகவானுக்குச் செய்யக்கூடிய ஆராதனம், கீர்த்தனம், கைங்கர்யம், தீர்த்த யாத்ரை, க்ஷேத்ராடனம் இவைகள் அனைத்தையும் நாம் ஈடுபாடுடன் செய்ய வேண்டும். உலக விஷயங்களை பற்றற்று செய்ய வேண்டும். ஆனால் நாமோ பகவத் விஷயங்களை ஈடுபாடு இல்லாமலும், உலக விஷயங்களை ஈடுபாடுனுடனும் செய்து வருகின்றோம்.**

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

# ஸ்ரீ நாரத பக்தி ஸூத்ரம் - 7

– ப்ரஹ்மஸ்ரீ பாலக்ருஷ்ண ஶாஸ்த்ரிகள்

## ப்ரேமையில் அனன்யதை

'பகவானிடத்தில் அனன்யதை' என்று முன் ஸூத்ரத்தில் சொல்லப்பட்டது. அந்த 'அனன்யதை' எனும் சொல்லிற்கு சற்றே விளக்கமளிக்கிறார் ஸ்ரீ நாரதர் இந்த ஸூத்ரத்தில்.

*அன்யாச்ரயாணாம் த்யாகோ அனன்யதா । 10*

மற்ற ஆஶ்ரயங்களை விட்டு இருப்பது அனன்யதையாகும்.

ப்ரேமையின் யதார்த்த நிலை இந்த ஸூத்ரத்தில் விளக்கப்படுகிறது. 'அனன்யதை' என்ற சொல்லிற்கு 'வேறு ஒன்று இல்லாத தன்மை' என்று பொருள். பகவானிடமே ப்ரேமை கொண்டு அவனையே பூர்ணமாய் ஶரணமடைந்திருக்கும் பக்தன், பகவானைத் தவிர வேறு எந்த ஒரு வஸ்துவையும் ஆஶ்ரயமாய் நினைக்கமாட்டான். இதுவே 'அனன்யதை' என்று சொல்லப்படுகிறது. எனவே தேவரிஷி, 'மற்ற ஆஶ்ரயங்களை விட்டு இருப்பது' என்கிறார். மற்ற ஆஶ்ரயம் எனும் சொல்லை ஆராயும் பொழுது,

*"அன்யதேவம் சான்யபலம் சான்யஸாதனமுத்ஸ்ருஜேத்"* என்று ஸத்குரு ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் ஸ்ரீ ரங்க மஹாத்மியத்தில் அருளிச் செய்தது விளக்கமாய் அமைகிறது. அதைப் பின்பற்றியே மேற்கொண்டு தொடருவோம்.

அன்ய தெய்வத்தை ஆஶ்ரயமாய் கொள்ளாதிருத்தல்,
அன்ய பலனை ஆஶ்ரயமாய் கொள்ளாதிருத்தல்,
அன்ய ஸாதனையை ஆஶ்ரயமாய் கொள்ளாதிருத்தல்,

என்று பொருள்.

முதலில் *'அன்ய தெய்வத்தை ஆ' ரயமாய் கொள்ளாதிருத்தல்'*- பகவானிடம் த்ருடமான ப்ரேமை கொண்ட பக்தனின் நிலை,கணவனிடம் த்ருடமான அன்பு கொண்ட கற்புடை மங்கையின் நிலைக்கு ஒப்பானது. *"ஸத்ஸ்த்ரிய: ஸத்பதிம் யதா"* என்று வைகுண்டபதியும் இதையே உவமையாகப் பேசுகிறார். எந்த நிலையிலும் கணவனை விட்டு சிறிதும் விலகாமல் அவனிடமே தன்னலமற்ற அன்பு கொண்டிருப்பது கற்புடை மங்கையின் ஸ்வபாவம்.

உயர்ந்த பதவியில் இருந்து, செல்வம் நிறைந்து, நல்ல நிலைமையில் கணவன் இருந்தால் தான் கணவனிடம் அன்பு கொண்டிருப்பாள் என்றில்லாமல், பதவி இழந்து, செல்வம் அழிந்து ஏழ்மையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாலும் முகம் கோணாமல், மகிழ்ச்சி குறையாமல் கணவனிடம் உள்ள அன்பு மாறாமல் அவனையே பற்றி இருப்பது உத்தம ஸ்த்ரீயின் பண்பாகும். ஏழ்மையிலும் வேறு எவரிடமும் கை ஏந்தாமல், தன் ஸுகத்துக்காக வேறு எவரையும் நாடாமல், கணவனின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு கணவனே கதியென்று இருப்பாள். எல்லோரிடமும் அன்பு காட்டினாலும், கணவன் ஒருவனுக்கே தன்னை அர்ப்பித்து அவனையே ஆஶ்ரயமாய் கொண்டிருப்பாள். பக்தனின் நிலையும் அத்தகையதே.

அல்பமான தேவைகளுக்காக பல மனிதர்களை நாடுவதும், விரும்பிய காரியம் மனிதர்களால் கைகூடாத நிலையில், தெய்வத்தை நாடுவதுமாய் இருப்பார்கள் ஸாமான்யர்கள். அதிலும், ஒவ்வொரு பலனுக்காக ஒவ்வொரு தெய்வம் என்று நாடுவார்கள் சிலர். எந்த கோயிலில் தன் கார்யம் கைகூடும் என்று ஒவ்வொரு கோயிலாய் சுற்றி வருவார்கள். எதிலும் த்ருட நிஷ்டை இருக்காது. தெய்வமோ, கோயிலோ லக்ஷ்யமாய் இருக்காது. தனது லாபம், தன் ஸுகம் ஒன்றே பெரிது என்றிருப்பார்கள். அது எங்கு கிடைக்குமென்று தேடி அலைவார்கள்.

ஆனால், இறைவனைத் தவிர்த்து தன் ஸுகம், தன் லாபம் என்று ஏதுமில்லாத ப்ரேம பக்தன் வாழ்க்கையில் ஸுகமோ துக்கமோ எது நேர்ந்தாலும் எந்த சிந்தனையுமில்லாமல் தன் ப்ரியதமனான பகவான் ஒருவனையே பற்றி இருப்பான். தன் ப்ரியதமனான பகவானிடமிருந்து மனதை வேறு ஒரு இடத்தில் அவனால் செலுத்த முடியாது. தனது இஷ்ட மூர்த்தியை விட்டு அல்பமான தேவைகளுக்காக வேறு இடம் நாடாது அவன் மனம் தேவதாந்த்ரங்களில் பகுமானம் இருந்தாலும் பகவானுக்கே தன்னை ஆட்படுத்தி, பகவானையே ஆஶ்ரயமாய் கொண்டிருப்பான். "நான் பகவானின் உடைமை. அவன் எனது ஸ்வாமி. எனது நாதனான ப்ரபு எப்படி வைக்கின்றானோ, அப்படி என்னை வைக்கட்டும். எதுவும் அவன் இஷ்டம்" என்றிருப்பான்.

***"பாவோ நான்யத்ர கச்சதி"*** (ஸ்ரீமத் ராமாயணம்)

என்று ராமனைத் தவிர வேறு இடத்தில் ஹனுமானால் மனதை செலுத்த முடியவில்லை. கோபிகைகளால் கண்ணனை விட்டு வேறு ஸ்வரூபத்தில் ஈடுபட முடியவில்லை.

சிவனே கிழப்பிராம்மண வடிவில் வந்து, சிவனை குறைத்துப் பேசி, நாராயணனை உயர்த்திப் பேசியும் பார்வதியின் மனம் சிவனைவிட்டு விலகவில்லை. ஆழ்வார்களால் நாராயணனை விட்டு சிவனிடமோ, நாயன்மார்களால் சிவனைவிட்டு நாராயணனிடமோ ஈடுபட முடியவில்லை. திருப்பாவையில் சூடிக் கொடுத்த சுடர்கொடி

*''நாராயணனே நமக்கே பறை தருவான்''* என்றும் *''உமக்கே நாம் ஆட்செய்வோம்''* என்றும் கூறுவதன் மூலம் இரண்டு இடங்களிலும் 'நாராயண*னே*' 'உமக்*கே*' என்று ஏகாரத்தால் அன்ய ஆச்ரயத்தை ஒதுக்கி அனன்ய நிஷ்டையை உணர்த்துகிறாள். ''நமக்*கே*'' என்ற இடத்திலும் ஏகாரத்தால் 'அனன்ய நிஷ்டாபரர்களான நமக்கு' என்று அனன்ய நிஷ்டை உணர்த்தப்படுகிறது. இதுவே அன்ய தெய்வத்தை ஆச்ரயமாய் கொள்ளாதிருத்தல் ஆகும்.

அடுத்து, *''அன்ய பலனை ஆச்ரயமாய் கொள்ளாதிருத்தல்''*– பகவானைத் தவிர ஏனைய பலன்கள் அன்ய பலன்கள். மோக்ஷம் உட்பட எந்த ஒரு பலனையும் விரும்பாது பக்தனின் மனம். மனதையும் புலன்களையும் பூர்ணமாய் பகவானிடம் அர்ப்பித்தவன் லோக ஸுகங்களை விரும்புவதில்லை என்பது மட்டும் இல்லை. தான் இருக்கும் இடத்தையே வைகுண்டமாக ஆக்கிக் கொண்ட அவனுக்கு மோக்ஷத்தில் கூட நாட்டம் இருப்பதில்லை.

*த்ரிபுவன விபவ ஹேதவேப்யகுண்ட ஸ்மருதிரஜிதாத்மஸுராதிபிர் விம்ருக்யாத் ।*
*ந சலதி பகவத்பதாரவிந்தாத் லவநிமிஷார்தமபி ய: ஸ வைஷ்ணவாக்ர்ய: ॥*

*(ஸ்ரீமத் பாகவதம்)*

''மூவ்வுலக வைபவத்தையும் வலுவில் தந்தாலும், தேவர்களால் தேடப்படும் பகவத் சரணாரவிந்த ஸ்மரணையிலிருந்து, கணநேரம், அரைநிமிடம் கூட விலகாமல், தடையற்ற பகவத் ஸ்மரணையிலிருப்பவனே வைஷ்ணவோத்தமன்'' என்று நவயோகி உபாக்யானத்தில் ஹரியோகீச்வரர் கூறுகிறார்.

*''ந ஜாது பீதாம்ருத மூர்சிதானாம் நாகௌகஸாம் நந்தன வாடிகாஸு*
*ரங்கேச்வர! த்வத் புரமாச்ரிதானாம் ரத்யாஸுனா மன்யதமோ பவேயம்॥*

''ரங்கநாதா! அமுதம் அருந்தி மூர்சையில் திளைத்திருக்கும் அமரர்களின் நந்தவனத்தில் ஒரு பொழுதும் எனக்குப் பிறவி வேண்டாம். உனது நிதி வீதியில் அலைந்து திரியும் நாயாகப் பிறவி கிடைக்க வேண்டுகிறேன்'' என்று வேண்டுகிறார் பராசர பட்டர்.

*த்வயி மேSனன்ய விஷயா மதிர்மதுபதேSஸக்ருத் ।*
*ரதிமுத்வஹதாதத்தா கங்கே வௌக முதன்வதி ॥* (ஸ்ரீமத் பாகவதம்)

''மதுபதே! எனது மனது வேறு விஷயங்களில் செல்லாமல், கங்கா ப்ரவாகம் கடலில் விழுவதுபோல் எப்பொழுதும் உன்னிடமே ரதி கொண்டிருக்க வேண்டும்'' என குந்தீ கண்ணனிடம் வேண்டுகிறார். எனவே, பகவானிடம் ரதியாகிய பலனைத் தவிர வேறு பலனை நாடாமல் இருப்பது பக்தனின் ஸ்வபாவம். இதுவே அன்யபலனை ஆஶ்ரயமாய் கொள்ளாதிருத்தல் ஆகும்.

அடுத்து *''அன்ய ஸாதனைகளை ஆஶ்ரயமாய் கொள்ளாதிருத்தல்''*– பக்தியைத் தவிர ஏனைய ஸாதனைகள் இங்கு அன்யஸாதனைகள் எனச் சொல்லப்படுகிறது. ஶாஸ்த்ரங்களில் வ்ரதம், தவம், கர்மா, தானம், த்யானம், ஞானம், பக்தி என ஸாதனைகள் பலவாகக் கூறப்பட்டுள்ளன. உலக நினைவு அற்றுப் போகாதவரை ஶாஸ்த்ர நியமங்களை பரிபாலனம் செய்யவேண்டும் என்று பக்தன் இவைகளில் ஈடுபட்டாலும், செயல்வடிவான இவைகள் ஸத்விஷய காலக்ஷேப ஹேதுவாய் இருக்குமே தவிர ஸாதனைகளாக ஆவதில்லை. ஶ்ரவணம், கீர்த்தனம், அர்ச்சனம் எனும் வடிவில் ஸாதனையாகவும், ப்ரேமை வடிவில் ஸாத்யமாயும் பக்தியே அவனுக்கு ஆஶ்ரயமாய் இருக்கிறது. ஸ்ரீ க்ருஷ்ண பகவானும் பகவத் கீதையில்,

*நாஹம் வேதைர் ந தபஸா ந தானேன ந சேஜ்யயா ।*
*ஶக்ய ஏவம்விதோ த்ரஷ்டும் த்ருஷ்டவானஸி மாம் யதா ॥*

*பக்த்யா த்வனன்யயா ஶக்ய: அஹமேவம் விதோSர்ஜுன ॥*

என்று ப்ரேமைக்கே தான் வசப்படுவதாயும், மற்ற ஸாதனைகளுக்கு வசப்படுவதில்லை என்றும் கூறுகிறார். மேலும், தவம், வ்ரதம், கர்மா, தானம், ஞானம் முதலியவையும் பக்தியை உபேக்ஷித்து செய்யப்படுமேயானால் பயனற்றதாய் ஆகின்றன. எந்த பக்தியால் அனைத்து ஸாதனைகளும் ஸபலமாக ஆகின்றனவோ, அந்த பக்தி பூர்ணமாய் லபித்த பக்தனுக்கு வேறு எந்த ஸாதனை தான் ஆஶ்ரயமாய் இருக்கும்? மேலும் எல்லாவற்றையுமே பகவத் ஸம்பந்தத்துடனேயே பார்க்கும் பக்தனுக்கு வேறு ஒரு பொருள் என்பதே இல்லாததால் அனன்யதை இயற்கையாகவே ஸித்தித்து விடுகிறது.

எனவே, அன்ய வஸ்துவையோ, அன்ய பலனையோ, அன்ய ஸாதனையையோ ஆஶ்ரயமாய் கொள்ளாமல் இருப்பதே அனன்யதை

ஆகிறது. ஶரணாகதன் அத்தகைய நிலையிலேயே இருக்க வேண்டும் என்பதை ஸத்குரு ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் ஸ்ரீ க்ருஷ்ணபக்தி ரஸோதயம் என்ற நூலில் கீழ்க்கண்ட ஶ்லோகத்தால் உணர்த்துகிறார்.

*த்யக்தஸர்வாஶ்ரய: க்ருஷ்ண சரணௌ ஶரணம் வ்ரஜேத் ।*
*ஸ ஏவ ரக்ஷகோ நான்யோ மமேதி த்ருட நிஷ்டயா ॥*

''ஸ்ரீ க்ருஷ்ணன் ஒருவனே எனது ரக்ஷகன். வேறு எவரும் இல்லை என்று த்ருட நிஷ்டையுடன் எல்லா ஆஶ்ரயங்களையும் விட்டு ஸ்ரீ க்ருஷ்ண சரணங்களை ஶரணம் அடையவேண்டும்'' என்று பொருள்.

ஒன்பதாவது ஸூத்ரத்தில் சொன்ன அனன்யதை என்பதை பத்தாவது ஸூத்ரத்தில் விளக்கி, பகவத் ப்ரதிகூலமான விஷயங்களில் உதாஸீனமாய் இருத்தல் என்பதை பதினொன்றாம் ஸூத்ரத்தில் விளக்குகிறார்.

*லோகவேதேஷு ததனுகூலாசரணம் தத்விரோதிஷு உதாஸீனதா ச ॥*

பகவானுக்கு ப்ரதிகூலமான விஷயங்களில் உதாஸீனனாய் இருத்தல் என்பது, லௌகிக வைதிகக் கார்யங்களில் பகவானுக்கு (பகவத் பக்திக்கு) அனுகூலமான கார்யங்களையே செய்தல் ஆகும்.

அன்பனுக்கு அனுகூலமான செயல்களிலேயே ஈடுபட்டு, அவனுக்கு இஷ்டமில்லாத, ப்ரியமில்லாத செயல்களிலிருந்து விலகி இருப்பது அன்பின் அடிப்படை ஸ்வபாவம். அன்பனான கணவனுக்கு அனுகூலமான செயல்களிலேயே ஈடுபட்டு, அவனுக்கு இஷ்டமில்லாத கார்யங்களிலிருந்து விலகி இருப்பாள் அன்புடைய மனைவி. குருவுக்கு அனுகூலமான கார்யங்களில் ஈடுபட்டு ப்ரதிகூலமான கார்யங்களை தவிர்த்து இருப்பான் குருபக்தனான சிஷ்யன். எஜமானனுக்கு அனுகூலமான செயல்களில் ஈடுபட்டு, ப்ரதிகூலமான செயல்களிலிருந்து ஒதுங்கி இருப்பது அன்புள்ள தாஸனின் தன்மை. அதுபோலவே, பகவான் ஒருவனையே பரமாகக் கொண்ட பக்தனின் செயல்கள் பகவானுக்கு அனுகூலமானவையாகவே இருக்க வேண்டும். அதாவது பக்திக்கு அனுகூலமானவையாய் இருக்க வேண்டும். லௌகிக, வைதிக கார்யங்களில் பகவத் பக்திக்குத் தடையாக உள்ளவைகளிலிருந்து ஒதுங்கி இருக்க வேண்டும்.

உண்டி, உடை, இருப்பிடம் என்று வாழ்க்கையின் அடிப்படை தேவையை ஒட்டி, அதற்கான லௌகீக முயற்சியில் ஈடுபட வேண்டியுள்ளது. ஆனால், அத்தகைய முயற்சிகள் பகவத் பக்திக்கு

இடையூறாக ஆகிவிடக்கூடாது. ஆடம்பரத்துக்கும், பகட்டுக்கும் அடிமையாகாமல் இருந்தாலே போதுமானது. எண்ணங்கள், பேச்சு, செயல்கள் யாவும் பகவானை ஒட்டியே இருக்க வேண்டும். லௌகீக கார்யங்களிலும், அதிகமாக சாப்பாடு, போகம், இந்த்ரிய ப்ரீதிக்கான செயல்கள், அனாவச்ய பேச்சு, தேவையில்லாத வ்யவஹாரம் முதலியன பகவத் பக்திக்கு விரோதம் என்பதால் அவைகளிலிருந்து ஒதுங்கி, பகவத் பக்திக்கு அனுகூலமான செயல்களிலேயே முக்கரணங்களாலும் ஈடுபடவேண்டும்.

அதேபோல், வைதிக கார்யங்களும் பகவத் பக்திக்கு அனுகூலமானவையாகவே இருக்க வேண்டும். வைதிக கார்யமும் பகவத் பக்தியை ஏற்படுத்தக் கூடியதாய் இருந்தால்தான் உயர்ந்த தர்மமாக ஆகிறது என்கிறது ஸ்ரீமத் பாகவதம்.

*''ஸ வை பும்ஸாம் பரோதர்ம: யதோ பக்திரதோக்ஷஜே''*
- (ஸ்ரீமத் பாகவதம்)

''எதனால் அதோக்ஷஜனான பகவானிடம் பக்தி உண்டாகிறதோ அதுவே சிறந்த தர்மமாகும்.''

நித்யம், நைமித்திகம், காம்யம், நிஷித்தம் என கர்மாக்கள் நான்காகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஸூதாடுதல், மதுபானம், வ்யபிசாரம், ஹிம்ஸை முதலியன 'கூடாது' என ஶாஸ்த்ரங்களால் நிஷேதம் பண்ணப்பட்டவை. எனவே, அவை அடியோடு கூடாது. விருப்பத்தை உத்தேசித்து செய்யும் காம்ய கர்மாக்களும் பந்தத்துக்குக் காரணமாயிருப்பதால், கூடாது. நித்ய, நைமித்திக் கர்மாக்கள் அவஶ்யம் செய்யப்படவேண்டியவை. அனுஷ்டிக்க வேண்டுமென ஶாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்டிருப்பதால் அவை விஹித கர்மாக்கள் என சொல்லப்படுகின்றன. அவைகளும் பலனை எதிர்பார்க்காமல், பகவானின் ஆக்ஞையாக நினைத்து பகவானின் ப்ரீதிக்காக செய்யப்படுமேயானால் பகவத் பக்திக்கு அனுகூலமானவையாகின்றன.

எனவே மேற்கூறியபடி லௌகீக வைதிகக் கார்யங்களில் பகவானுக்கு அனுகூலமானவைகளையே செய்யும்பொழுது, பகவத் பக்திக்கு விரோதமான செயல்களில் உதாஸீனம் ஏற்படுகிறது என்று கூறுகிறார் மேற்படி ஸூத்ரத்தில்.

(தொடரும்)

# எந்தரோ மஹானுபாவுலு - 5

கும்பகோணத்திலிருந்த சைவ, வைஷ்ணவ தேவாலயங்களின் சொத்து, சுதந்திரம், நித்ய பூஜை, உத்ஸவாதிகள் முதலியவை ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகளின் அதிகாரத்திலும் மேற்பார்வையிலும் இருந்தன. ஆங்காங்குள்ள ஆகம விதிப்படியும், ஸம்ப்ரதாய முறைப்படியும் எல்லா கோவில்களிலும் சிறந்த முறையில் ஆராதனைகள் நடைபெற்று வந்தன. சைவர்களும் வைஷ்ணவர்களும் ஒற்றுமையுடன் சமரச மனப்பான்மையுடனும் ஸஹோதரர்கள் போல் நிம்மதியாக வாழ்ந்திருந்தனர்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏற்கனவே நம் ஸ்வாமிகளிடம் வாதத்தில் அபஜயம் அடைந்த லிங்கராஜுவின் சிஷ்யன் ஒருவன் தனது குருவின் தோல்வியை ஸகித்துக் கொள்ள முடியாமல் எப்படியாவது ஸ்வாமிகளுக்கு அவமானத்தை உண்டாக்க வேண்டுமென தீர்மானித்துக் கொண்டான். அவன் ஒற்றுமையாக இருந்த மக்களிடையே கலகம் செய்ய எண்ணி, ஸாரங்கபாணி ஸ்வாமி கோவிலின் பின்புறம் உள்ள பொற்றாமரைக் குளம், கும்பேஶ்வரர் கோவிலுக்குத்தான் சொந்தமாகும் என்று அக்கோவிலின் பரிசாரர்களிடம் தூண்டிவிட்டான். இந்த விஷவித்து முளைத்து, பரிசாரர்கள், அர்ச்சகர்கள், கோவிலின் இதர சிப்பந்திகள், சிவ பக்தர்கள் என்று இந்த வதந்தி பரவி எல்லோரும் ஒன்று சேர்ந்து ஸ்வாமிகளிடம் வந்து பொற்றாமரைக் குளம் கும்பேஶ்வரர் கோவிலின் முன்னால் இருப்பதாலும் ஸாரங்கபாணி கோவிலுக்குப் பின்னால் இருப்பதாலும் அந்தக் குளம் கும்பேஶ்வரர் கோவிலுக்கு சொந்தமென்று வாதாடினார்கள்.


ஸ்வாமிகள் லேசாக சிரித்துவிட்டு, வெகு காலமாகவே இந்த குளம் ஸாரங்கபாணி கோவிலைச் சார்ந்துள்ளது. மேலும், ஸ்தல புராணத்திலும் இதற்கு ஆதாரம் உள்ளது. இது போன்ற சின்ன விஷயத்தில் வீண் அடம் பிடிக்காமல் இருவருமாக உபயோகித்துக் கொண்டு ஸமாதானமாக நடந்து கொள்ளுங்கள் என புத்திமதி கூறி அனுப்பினார். அவர்களும் ஸமாதானமாக திரும்பினர். ஆனால், இதை அறிந்த லிங்கராஜுவின் சிஷ்யன் அவர்களிடம், ''ஸ்வாமிகள் உங்களை ஸுலபமாக ஏமாற்றிவிட்டார். இந்த குளம் கும்பேஶ்வரர் கோவிலுடையதுதான். என் குருநாதர் பல முறை கூறியுள்ளார். குளத்தில் பல சைவ சின்னங்கள் உள்ளன. வேண்டுமானால் பரிக்ஷித்துப் பார்த்துக் கொள்ளுமாறு ஸ்வாமிகளிடம் சொல்லிவிடுங்கள்'' என்று துர்போதனை செய்தான். உடனே அவர்கள் மறுபடியும் ஸ்வாமிகளிடம் சென்றனர்.

ஸ்வாமிகள் அவர்களிடம், ''நீங்கள் துர்போதனையால்தான் இப்படி நடந்து கொள்கிறீர்கள். குளம் ஸாரங்கபாணி கோவிலைத்தான் சாரும். நீங்களும் உபயோகித்துக் கொள்ளுங்கள். வீணாக அடம் பிடித்தால் அது உங்களிடம் இராது'' என்று நயமாகச் சொன்னார். அவர்கள் கேட்பதாக இல்லை. எனவே ஸ்வாமிகள், மறுநாள் காலை, பொது ஜனங்கள் முன் குளத்தை ஸோதித்துப் பார்க்க ஒப்புக் கொண்டார். இதையறிந்த லிங்கராஜுவின் சிஷ்யன் இரவோடு இரவாக நந்தியின் சிலைகளையும், சிவலிங்கங்களையும் குளத்தில் போட்டுவிட்டு, இனி ஸ்வாமிகள், நிச்சயம் தோல்வியடைவார் என்று ஆனந்தமாக இருந்தான்.

மறுநாள் காலை பொது ஜனங்கள் முன்னிலையில், ஸ்வாமிகள் தனது நான்கு ஐந்து சிஷ்யர்களை அழைத்து மந்த்ராக்ஷதை தூவி, ஆசீர்வதித்து, குளத்தில் மூழ்கிக் கிடைக்கும் சின்னங்களை மேலே கொண்டு வருமாறு பணித்தார். அவர்களும் ஸ்வாமிகளை வணங்கி குளத்தில் மூழ்கி கையில் கிடைத்த சின்னங்களுடன் மேலே வந்தனர். வெற்றி நமதே என்று அலக்ஷியமாக அவர்களைப்பார்த்த லிங்கராஜுவின் சிஷ்யன் திடுக்கிட்டான். ஏனென்றால், அவர்கள் காண்பித்த சின்னங்கள் யாவும் ஹனுமான் சிலைகளும் சாளக்கிரமங்களும்தான்.

உடனே வெறிபிடித்தவன் போல், ''இது ஏதோ இந்திரஜாலம், நாம் நம்பமுடியாது. மறுபடியும் மூழ்கச் சொல்லுங்கள்'' என்று கூச்சலிட்டான். ஸ்வாமிகளும் ஒப்புக் கொண்டார். இந்த முறையும் அதே சின்னங்கள் தான் வெளிவந்தன. ஒரு நந்தியோ, சிவலிங்கமோ அகப்படவில்லை. ஸ்வாமிகள் கமண்டலத்திலிருந்து சிறிது ஜலத்தை எடுத்து அவன் மீது தெளித்தார். உடனே அவன் தான் செய்த பாவங்களை ஒன்று விடாமல் ஒப்புவித்தான். பிறகு அந்த இடத்தைவிட்டு ஓடிவிட்டான். ஸ்வாமிகள் அனைவரையும் ஒற்றுமையாக இருக்குமாறு அறிவுரை கூறி மடத்திற்குத் திரும்பினார். அன்று அகப்பட்ட ஹனுமார் சிலைகளில் ஒன்றை இந்த வெற்றியின் நினைவாக குளத்தின் வடகரையில் ஸ்வாமிகளே ப்ரதிஷ்டை செய்திருக்கிறார். இன்றும் அந்த ஹனுமாருக்கு பூஜை நடந்து கொண்டு வருகிறது.

ஒரு சமயம், ஸ்வாமிகள், காவிரியின் ஆற்றங்கரையில் ''நியாய ஸுதா'' என்ற உயர் நூலைப் பாடம் சொல்லிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு ஸேவகன் ஓடிவந்து ஸ்வாமிகளை நமஸ்கரித்து நின்றான். அவனைப் பார்த்ததுமே ஸ்வாமிகள், ''என்ன அப்பா! உத்தர தேசத்து ஸங்கீத வித்வான் போட்டிக்கு வந்திருக்கிறாரா? மடத்தில் அவரை சந்திக்கிறேன்'' என்றார். ஸேவகனுக்கு ஏக வியப்பு. நாம் விஷயத்தைக் கூறுமுன்னே ஸ்வாமிகளே எல்லாவற்றையும் கூறிவிட்டாரே! என்ன அபரோக்ஷ ஞானம்! என்று வியந்தான்.



காலை 8 மணிக்கு ஸ்வாமிகள் மடத்திற்கு விஜயம் செய்தார். மடத்து ஸர்வாதிகாரி, வித்வானை மிக மரியாதையுடன் அழைத்து வந்தார். தேஜோமயமாக அமர்ந்திருந்த ஸ்வாமிகளை தரிசித்ததும், ஸங்கீத வித்வான் அவரை நமஸ்கரித்து,. ''ஸ்வாமி, தாங்கள் ஸகல கலா வல்லவர் என புகழ் பெற்றுள்ளீர். நான் புகழ் பெற்ற ஸங்கீத வித்வான் தான்சேன் அவர்களிடம் குருகுல வாசம் செய்து ஸங்கீதம் பயின்று வடநாட்டில் மிகுந்த புகழ் அடைந்துள்ளேன். தங்களிடம் ஸங்கீதக் கலையில் போட்டியிட வந்துள்ளேன். ஸந்யாஸியான தங்களிடம் அபசாரப்படுவதற்கு மன்னிக்க வேண்டும் என்று வினயமாகக் கூறினான். ஸ்வாமிகளும், ''தாங்கள் ஸரஸ்வதி புத்ரர். உங்களுடன் போட்டியிடுவதில் நமக்கு ஸந்தோஷம். நாளை மதியம் ஸாரங்கபாணி கோவிலில் போட்டியை வைத்துக் கொள்வோம்'' என்று சொன்னார். அந்த வடநாட்டு வித்வான் ஸௌகரியமாக தங்குவதற்கு தேவையான ஏற்பாடுகளையும் செய்து, மறுநாள் பூஜைக்கு அவரை அழைத்து வரவும் பணித்தார்.

மறுநாள் பூஜை காலத்திற்கு வித்வான் வந்தார். ஸ்வாமிகளின் திவ்யமான பூஜாக்ரமத்தை கண்ணாரக்கண்டு களித்த வித்வான் போஜனத்திற்குப் பிறகு மடத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டு ஸாரங்கபாணி கோவிலுக்கு வந்தடைந்தார். ஸபையில் ஸங்கீத வித்வான்கள், ரஸிகர்கள், பண்டிதர்கள், அதிகாரிகள், பொதுமக்கள் அனைவரும் குழுமி இருந்தனர். ஸங்கீத வித்வான் முதலில் பாட ஆரம்பித்து தோடி ராக ஆலாபனை பதம், பைரவி ஆலாபனை பதம் என்று பாடி மால்கோஸ் ராகத்தை (கர்நாடக ஸங்கீதத்தில் ஹிந்தோளம் எனப்படும் ராகம்) விஸ்தாரமாக, மிக ரஞ்ஜகமாக ஸபையோர்கள் அதிஸயிக்கும் விதம் பாடினார். நம் ஸ்வாமிகளும் தலையை அசைத்து பாடகரை உத்ஸாகப்படுத்திக் கொண்டிருந்தார்.

சற்று நேரத்திற்குப் பிறகு வித்வான், ஸ்வாமிகளிடம், ''என் போல் உங்களால் பாடமுடியுமா?'' என வினவினார். ஸ்வாமிகள் ''அதே மால்கோஸ் ராகத்தைப் பாடுகின்றேன்'' என்று கூறி சுருதியுடன் ஆலாபனத்தை ஆரம்பித்தார். அவரது ஸங்கீதத்தில் மெய்மறந்த உத்தர தேசத்து வித்வான், இவர் என்ன கானகலா ஸரஸ்வதியா என்று வியந்தார். ஸங்கீதம் முடிந்ததும் வித்வான் ஸ்வாமிகளை மெச்சிப் பேசி, ''உங்கள் ஸங்கீதம் எனது ஸங்கீதத்தைவிட உயர்ந்ததுதான், இருந்தாலும் என் குருநாதரிடம் தனிசக்தி இருந்தது'' என்று இழுத்துப் பேசினார்.

உடனே, ஸ்வாமிகள் இடைமறித்து, ''தங்கள் குருநாதர் தீபக் ராகத்தைப் பாடிய பெருமையை நான் அறிவேன். என்னையும் அதைப்

பாடச் சொல்கிறீர்கள். அவ்வளவுதானே!'' எனச் சொல்லி ஸபை நடுவில் பஞ்சமுக விளக்கை, நிறைய எண்ணை ஊற்றி, திரியிட்டு, தீபம் ஏற்றாமல் வைக்கச் சொல்லிவிட்டு தீபக் ராகத்தைப் பாட ஆரம்பித்தார்.

முதலில் மெது நடை, பிறகு வேக நடை என்று ஸ்வரவின்யாஸம், கமகம், மூர்ச்சனை என தன் கலா ஞானத்தைக் காண்பிக்க ஆரம்பித்தார். ஆலாபனம் உச்சக்கட்டத்தை அடைந்ததும் பஞ்சமுக விளக்கின் திரிகள் ஒன்றன்பின் ஒன்றாக பற்றி எரிய ஆரம்பித்தன. வித்வான் நிலை குலைந்து போனார். ஸபையோர் ஜயகோஷம் செய்தனர். உடனே ஸபையில் ஒருவர் எழுந்து, ''ஸ்வாமி நான் விஜயநகர ஸமஸ்தானத்து ஆஸ்தான வித்வான். நீங்கள் எனது சவாலையும் ஏற்று கர்நாடக ஸங்கீதம் பாடி, ஸபையில் அற்புதம் நிகழ்த்திக் காட்டவேண்டும்'' என்றார். ஸ்வாமிகளும் இதுவும் ஹரியின் சித்தம். ஹரி அனுக்ரஹத்தால் எதுவும் முடியும். கானகலையால் கல்லைக் கரைக்க வேண்டுமா? மந்தமாருதம் வீசச் செய்ய வேண்டுமா? ஆகாயத்தில் மழை கொட்டச் செய்ய வேண்டுமா? என்று கேட்டார். உடனே விஜயநகர ஆஸ்தான வித்வான், ''மழையை கொட்டச் செய்ய வேண்டும்'' என்று சொன்னார். ஸ்வாமிகள் அமிர்தவர்ஷிணி என்ற ஹிந்துஸ்தானி ராகத்தை, நம் கர்நாடக ஸங்கீத பாணியில் மெய்மறந்து பாடினார். திடீரென்று கருமேகங்கள் சூழ்ந்து இருள் கவ்வி, மின்னல்கள் மின்னி, இடி இடித்து பெருமழை பொழிய ஆரம்பித்தது.

வெளியேயும், உள்ளேயும் குளிர்ச்சியாக ஆயிற்று. எல்லோர் மனமும் குளிர்ந்தது. சற்று நேரத்தில் மழை ஓய்ந்து, மேகங்கள் வந்த வழியே திரும்பி எங்கேயோ சென்றுவிட, வானத்தில் முன் போல் ஆதவன் ப்ரகாசிக்க ஆரம்பித்துவிட்டான். விஜயநகர வித்வான் எழுந்து நின்று, ''தாங்கள் ஸ்ரீ வ்யாஸராஜரின் ப்ரிய சிஷ்யரான ஸ்ரீ க்ருஷ்ண பட்டரிடம் ஸாங்கோ பாங்கமாக வீணை கற்றதை நான் அறிவேன். சாரதா தேவியின் ப்ரிய புத்ரரான தங்களுக்கு எது அஸாத்யம்? கர்நாடக ஸங்கீதத்தின் மகிமையை உலகிற்குத் தாங்கள் காட்ட வேண்டுமென்று தான் நான் உங்களுக்கு சவால் விட்டேன். என் விருப்பத்தை நிறை வேற்றிய தங்களுக்கு கோடி நமஸ்காரங்கள்'' என்று கூறி அமர்ந்தார். ஸ்வாமிகள் உத்தர தேசத்து வித்வானுக்கு ஜோடி ஶால்வை, தங்க ஆபரணங்கள், வஸ்த்ரங்கள், ஸன்மானம் வழங்கி, பாராட்டி, அனுக்ரஹித்து அனுப்பி வைத்தார்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

# பாலகர்களுக்கு ஒரு கதை - 12

– ஸ்ரீ ஸ்வாமிகள்

## புண்டரீகன்

தக்ஷிண தேசத்தில் புண்டரீகன் என்ற ஒருவன் வாழ்ந்து வந்தான். ஒரு ஸமயம் மாலையில் அவன் ஒரு உபன்யாசத்திற்குச் சென்றான். அந்த உபன்யாசகர், ''ஹிந்துவாக பிறந்த ஒவ்வொருவரும் அவச்யம் ஜன்மாவில் ஒரு தரம் காசி க்ஷேத்ரம் சென்று கங்கையில் ஸ்நானம் செய்ய வேண்டும்'' என்று கூறியதைக் கேட்டதும், அவனுக்கு அவச்யம், தான் காசி சென்று கங்கா ஸ்நானம் செய்ய வேண்டும் என்று தோன்றிவிட்டது. அவனுக்கு வயதான தாய் தந்தையரும், மனைவி குழந்தைகளும் இருந்தனர். அவர்களிடம் சென்று விஷயத்தைத் தெரிவித்தான். வயதான காலத்தில் தங்களைவிட்டு கிளம்ப வேண்டாம் என்று அவனுடைய தாய் தந்தையர் கூறினர். மனைவி மக்களும் தங்களைத் தனியாக விட்டுச் செல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொண்டனர். அவனுக்கு காசி யாத்ரையைக் கைவிடவும் மனம் வரவில்லை. அந்த காலத்தில் காசி யாத்ரை சென்று வருவது என்பது அவ்வளவு ஸுலபமான விஷயமல்ல. ஆகவே, தாய் தந்தையர், மனைவி, மக்கள் அனைவரையும் அழைத்துக் கொண்டே யாத்ரை கிளம்பினான். யாத்திரை மிகவும் சிரமமாகவே இருந்தது.

சில ஸமயங்களில் தாயையும், சில ஸமயங்களில் தந்தையும், சில ஸமயங்களில் மனைவி மற்றும் குழந்தைகளையும் தூக்கிக் கொண்டு செல்வான். இப்படியாக வெகு நாள் யாத்ரை செய்து சந்த்ரபாகா நதி தீரத்தை வந்து அடைந்தான். இங்கு குக்கூட மஹரிஷி என்றொரு ரிஷி ஆஸ்ரமம் அமைத்து இருந்துவந்தார். மஹா தபஸ்வி அவர். தக்ஷிண தேசத்தில் இருந்து அங்கு வந்து சேர்ந்த புண்டரீகனைப் பார்த்து அவனுடைய யோக க்ஷேமங்களை விசாரித்தார். பிறகு மிகவும் கருணையுடன் அவனைப் பார்த்து, ''தாய் தந்தையர்களை தள்ளாத வயதில் சிரமப்படுத்தி இப்படி ஒரு யாத்ரை தேவையில்லை. மாதா பிதாக்களுக்கு ச்ரத்தையுடன் கைங்கர்யம் செய்தாலே போதும். அதைக் காட்டிலும் ச்ரேஷ்டமான புண்யம் தரக்கூடிய கார்யம் ஒன்றும் இல்லை என்று பகர்ந்தார். அதை செவிமடுத்த அவன் அக்கணமே, தான் யாத்ரை மேற்கொள்ளும் உத்தேஸத்தை கைவிட்டு அங்கேயே ஒரு குடில் அமைத்து தாய் தந்தையர்களுக்கு கைங்கர்யத்தை ச்ரத்தையுடன் செய்து வந்தான்.



அது பகவான் த்வாரகையில் ராஜ்ய பரிபாலனம் செய்து வந்த காலம். பகவானைக் காண ஒரு ஸமயம் நாரத மஹரிஷி வந்தார். நாரதரைப் பார்த்த பகவான், தனக்கு வாழ்க்கையில் மிகப் பெரிய குறை உள்ளதாக தெரிவித்தான். நாரதர், 'பகவானுக்கு என்ன குறை இருக்க முடியும்?' என்று வினவ, பகவான், ''என்னைப் பெற்ற தாய் தந்தையர்களுக்கு நான் கைங்கர்யம் செய்ய முடியவில்லையே என்ற ஒரு குறை உள்ளது'' என்று தெரிவித்தார். மேலும் பகவான் நாரதரைப் பார்த்து, ''மாதா பிதாக்களுக்கு இன்றும் ஶ்ரத்தையுடன் கைங்கர்யம் செய்பவர்கள் எவராவது உள்ளார்களா'' என்று வினவினான். அதைக் கேட்ட நாரதரும், சந்த்ரபாகா நதி தீரத்தில் குக்கூட மஹரிஷியின் சீடன் புண்டரீகன் என்றொரு பக்தன் ஶ்ரத்தையுடன் மாதா பிதாக்களுக்கு கைங்கர்யம் செய்து வருகின்றான் என்பதைத் தெரிவித்தார். அக்கணமே பகவான் அவர்களைக் காண ஆவல் கொண்டு ருக்மிணியுடன் கிளம்பினார்.

சந்த்ரபாகா நதிதீரத்தில் பகவான் க்ருஷ்ணன், ருக்மிணியுடனும், நாரத மஹரிஷியுடனும் மற்றும் பல பக்தர்களுடனும் புண்டரீகனின் குடிலின் முன்பு போய் நின்றார். அவர்களைக் காண பெரும் கூட்டம் வாயிலில் கூடியது. புண்டரீகன், வந்திருக்கும் பகவானையும், ருக்மிணியையும் பார்த்து ஸந்தோஷித்தான். தன்னைத் தேடி வந்தவரை உபசரிக்க எண்ணினான். அப்பொழுது அந்த குடிலில் செங்கல்கள் மட்டுமே இருந்தன. அதை எடுத்து வந்தவர்களுக்கு ஆசனமாகக் கொடுத்து விட்டு, மிகவும் ஶ்ரத்தையுடன் வழக்கம் போலவே தன்னுடைய தாய் தந்தையர்களுக்கு கைங்கர்யம் செய்தான்.

பகவான் வாசலில் வந்து நின்றாலும், இவ்வளவு கூட்டம் வாசலில் இருந்தும், தன்னுடைய நித்ய கைங்கர்யத்தை புண்டரீகன் கொஞ்சமும் குறைக்க வில்லை. வழக்கமான கைங்கர்யத்தை முடித்துக் கொண்டு பகவானிடம் வந்து ஸ்வாகதம் சொல்லி, பாத்யம் கொடுத்து, முறைப்படி பூஜை செய்து இவ்வளவு நேரம் காக்க வைத்ததற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். பகவானும் ப்ரீதியுடன் புண்டரீகனைப் பார்த்து, ''நீ மாதா பிதாக்களுக்கு ஶ்ரத்தையுடன் கைங்கர்யம் செய்வதைப் பார்ப்பதற்காகவே நாங்கள் இங்கு வந்தோம். மிகவும் ஸந்தோஷம். உனக்கு ஏதாவது வரம் வேண்டுமானால் கேள்'' என்று சொன்னார்.

புண்டரீகனும் மாதா, பிதாக்களுக்கு என் குருநாதர் சொல்லியபடி நான் கைங்கர்யம் செய்ததால் தாங்கள் ப்ரீதி அடைந்து, என்னைத் தேடி வந்து தர்சனம் கொடுத்தீர் என்பதை உலகம் உள்ளளவும் தெரிந்து

கொள்ள நீங்கள் இவ்விடத்திலேயே கோவில் கொள்ள வேண்டும் என்று ப்ரார்த்தித்தார். பகவானுடைய திருமேனியிலிருந்தும், ருக்மிணி திருமேனியிலிருந்தும் இரண்டு அர்ச்சாவதாரங்கள் வெளிப்பட்டன. பகவானும் ருக்மிணியும் புண்டரீகன் செய்த கைங்கர்யத்தை இடுப்பில் கைவைத்தபடியே பார்த்துக் கொண்டிருந்தார்கள். வெளிப்பட்ட அர்ச்சாவதாரமும் அப்படியே இருந்தது. பகவான் விபவாதாரமாக துவாரகைக்குச் சென்று விட்டார்.

அந்த பக்தருக்கு காட்சி அளித்தபடியே பகவான் சந்த்ரபாகா நதி தீரத்தில் பண்டரீபுரம் என்னும் க்ஷேத்ரத்தில் பாண்டுரங்கன் ருக்மிணியாக இடுப்பில் கைவைத்துக் கொண்டபடி, செங்கல்லில் நின்று கொண்டு, இன்றும் ஸேவை ஸாதிக்கின்றான். புண்டரீகன் தாய் தந்தையருக்கு கைங்கர்யம் செய்ததால்மட்டும் பகவான் திருப்தி அடையவில்லை. குருநாதர் சொன்னதை சிரமேற்கொண்டு செய்ததற்காகதான் காட்சி தந்தான்.

# செய்திகள்

## செப்டம்பர் 6-ந் தேதி

பகவன்நாம போதேந்த்ராள் ஆராதனையை முன்னிட்டு ஸ்ரீ ஸ்வாமிகள் பக்தர்களுடன் காஞ்சி வரதராஜ பெருமாள் கோவில், மற்றும் காஞ்சிபுரம் அருகே உள்ள செவிலிமேடு ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்ம கோவில் சென்று நாம கீர்த்தனம் செய்தார்கள்.

மாலையில் சென்னை ப்ரேமிக பவனத்தில் அகண்ட ராமநாமம் நடைபெற்றது. ஸ்ரீ ஸ்வாமிகள் மஹா பக்தர்களைப் பற்றியும், பகவன்நாம மகிமை பற்றியும் ப்ரவசனம் செய்தார்கள். இரவு திவ்யநாமம் நடைபெற்றது.

## செப்டம்பர் 13-ந் தேதி - ராதாஷ்டமி

சென்னை ப்ரேமிக பவனத்தில் விசேஷ திவ்யநாமம் நடைபெற்றது.

## செப்டம்பர் 21-ந் தேதி முதல் 27-ந் தேதி வரை

சென்னை ப்ரேமிக பவனத்தில் நவராத்ரியை முன்னிட்டு காலையில் ராமாயண மூல பாராயணமும், மாலையில் ராமாயண ப்ரவசனமும் நடந்தேறியது.

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து-38

*கோபமில் குணத்தோய் குறியாய் எனைக் கொள*
*குறையென் செய்தேன் அருணாசலா* 25

பகவான், மிகவும் ஶாந்த ஸ்வரூபமானவன், மோக்ஷத்திற்காக உபாஸிப்பவர்கள் ஸாத்வீகமான தேவதையைத்தான் உபாஸிக்க வேண்டும். எந்த ஸ்வாமியை உபாஸிக்கின்றோமோ அந்த ஸ்வாமியின் ரூபம், குணங்கள் எல்லாம் உபாஸிக்கின்றவர்களை வந்து அடையும். உபாஸிக்கின்ற தேவதையாகவே உபாஸிப்பவன் ஆவதுதான் உபாஸனையின் பரிபூர்த்தி. நம்முடைய ஸநாதனமான மதத்தில் தெய்வங்களின் கரங்களில் பல விதமான ஆயுதங்களை கொடுத்திருப்பதே, அந்த தேவதைகளை உபாஸிப்பவர்கள் வீரமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். நம்முடைய மதம் வீர மதமாகும். ஆனால், நம்முடைய மதத்தின் தத்துவங்களை தவறாக புரிந்து கொண்டவர்கள் இதை கோழை மதமாக்கி விட்டனர்.

பொறுமையாக இருப்பது வேறு, கோழைத்தனம் என்பது வேறு. எதிரியை தண்டிக்க நமக்கு ஸரீர ரீதியாகவோ தவத்தினாலோ சக்தி இருந்தும், கருணையினால் தண்டிக்காமல் இருப்பதுதான் பொறுமை ஆகும். தண்டிப்பதற்கு நம்மிடம் ஸரீர பலமும் இல்லை. தவசக்தியும் இல்லை. அதனால் சும்மா இருந்தால் நாம் கோழையே அன்றி பொறுமைசாலி அல்ல. சாப்பிடுவதற்கு பல விதமான அன்னங்கள், பக்ஷணங்கள் பக்கத்தில் இருந்தும் சாப்பிடாமல் இருப்பவனைத்தான் வ்ரதம் இருக்கின்றான் என்கின்றோம். அதைத்தான் உயர்ந்ததாகவும் கூறுகின்றோம். சாப்பிடுவதற்கு ஒன்றும் இல்லை. ஆகவே சாப்பிடாமல் இருந்தால் அவனை வ்ரதம் இருப்பவன் என்று கூற முடியாது.

வாழ்க்கையில் ஸகல வஸதிகள் இருந்தும், அவைகளை அனுபவித்தும், உயர்ந்த லட்சியத்திற்காக அவைகளை துறந்தால் தான் அவன் துறவி அல்லது தியாகி. ஒன்றுமே இல்லாமல் ஒருவன் நடைபாதையில் குடித்தனம் நடத்தினால் அவன் ஏழையே தவிர துறவியோ, தியாகியோ ஆகமாட்டான்.

இந்த்ரியங்கள் மிகவும் பொல்லாதது. நாம் அவைகளை ஜயித்துவிட்டது போல் தோன்றும். ஆனால், சுலபத்தில் நம்மை அவை ஏமாற்றிவிடும். ஒரு பண்டிகையன்றோ அல்லது மற்றுமொரு

வைபவத்திலோ பலவிதமான அன்னங்கள், பக்ஷணங்கள் செய்து வைத்திருப்பார்கள். ஆனால் நமக்கு ஒன்றையும் சாப்பிடுவதற்கு தோன்றாது. ருசியை, நாக்கை, ஜயித்து விட்டது போல் தோன்றும். ஆனால், எங்கோ ஒரு தேசத்தில் நாம் பழக்கப்பட்ட உணவு வகைகள் கிடைக்காத இடத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் தங்கினாலும் போதும். எப்பொழுது, நாம் பழக்கப்பட்ட ருசியான சாப்பாட்டை பார்க்கப் போகின்றோம் என்று தவித்து விடுவோம். அப்பொழுதுதான் நாம் நாக்கை ஜயிக்கவில்லை என்பது புரியும். கையில் நிறைய பணம் இருக்கும்பொழுது, கடைத்தெருவிற்கு சென்றால் எதையும் வாங்கத் தோன்றாது. ஆனால், கையில் பணம் இல்லாத ஸமயம் நாம் கடைத்தெருவிற்கு போனால், பார்ப்பவை எல்லாவற்றையும் வாங்க வேண்டும் போல் தோன்றும். முடியாதபோது நம் மீதே நமக்கு கோபம் வரும்.

(தொடரும்)

தொகுப்பு : **முரளீதரதாஸன்**

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

**அக்டோபர் 1-ந் தேதி**

சென்னை ப்ரேமிக பவனத்தில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாள் அவதார உத்ஸவம் கொண்டாடப்படும்.

**அக்டோபர் 21-ந் தேதி**

ஐப்பசி - ஸ்வாதி திருநக்ஷத்ரம்

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி மஹோதஸவம் சென்னை ப்ரேமிக பவனத்தில் கொண்டாடப்படும்.

முன் அட்டை படம் : ப்ரஹ்மோத்ஸவத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள்

பின் அட்டை படம் : மணிமங்கல புறப்பாட்டில் நம் ஸ்வாமிகள்

Photos by : Sri R. Kalyanakrishnan

# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registrar of Newspapers for India
R. No. 62828/95

Regd. No. TN/MS(S)/714/98/
WPP No. TN/MS(S)/54/98

| வேணு:4 | அக்டோபர் 1998 | கானம்:3 |
|---|---|---|





Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar